17 FEB 1931


# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடயர்ட் டிப்டி கலெக்டர்.

ஆபீஸ் : மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் V. 1930ஹு டிசம்பர்மீ. நெ. 12.


## தென் இந்திய மாடுவகைகளில் இரண்டு வகைகளின் முக்கியப்பிரதேசமாகிய கொங்குநாடு.

(பத்திராசிரியரின் கட்டுரை)

தென்இந்தியாவின் வண்டிமாடுகள் முக்கியமாய்க் கோயம்புத்தூரில்தான் உற்பத்தியாகின்றன. அப்பிரதேசத்தில்தான் ஆலம்பாடி வகையும் காங்கயம் வகையும் உண்டாகின்றன.

### ஆலம்பாடிவகை.

இவ்வகை மாடுகள் கொள்ளேகாலத்துச் சந்தைகளில் விற்பனைக்குக் கொண்டுவரப்படுகின்றன. காவேரி ஆற்றின்பக்கத்தில் பெஸ்தல் என்கிற பிரதேசத்தில் இவ்வகை அதிகமாக விருக்கிறபடியால் இதற்கு பெஸ்தல் வகையென்றும் பெயருண்டு. இவ்வகையை மலைமாடு என்றும் கோயம்புத்தூர் ஜனங்கள் சொல்வதுமுண்டு. இது மைசூர் இராஜியத்திய தொட்டண்ண வகை மாடுகளின் உட்பிரிவென்றே சொல்லலாம் இவ்வகை மாடுகள் அதிக பாரத்தை இழுக்கும், ஆனால் அதிகவேகமாக ஓடா.

### காங்கயம்வகை

காங்கயம் வகையைத்தான் கொங்குவகை கொங்குநாடு வகை என்றும் கூறுவதுண்டு. காங்கயம் மாடுகளில் இறு உட்பிரிவுகள் உண்டு, ஒரு உட்பிரிவு உயரமான மாடுகள், மற்றொன்று குட்டைமாடுகள். குட்டை உட்பிரிவு காங்கயம், தாராபுரம், உடுமல்பேட்டை பொள்ளாச்சி பல்லடம்

ஈரோடு தாலூக்காக்களில் அதிகமாக விருக்கின்றன; பெரியமாட்டு உட்பிரிவு கரூர், அரவக்குரிச்சி, திண்டுகல் தாலூக்காக்களில் அதிகமாகக் காணப்படு கின்றன. இவைகள் மழைகுறைவானப் பிரதேசங்களில் தான் அபிவிருத்தி யாகின்றன. மழைகுறைவானப் பிறதேசங்களில் ஜனங்களுக்கு வியவசாய வேலை அதிகமாக இல்லாதபடியால் அவர்கள் மாட்டு அபிவிருத்தித் தொழிலை அநுஸரித்து, வரும்படிகளை யடைகிறார்கள். நாம்கூறுகிற காங்கயம்வகை யில் காங்கயம் மாடுகள் என்று சொல்லப்பட்ட பழைய கோட்டைப்பட்டா காரரின் மாடுகள் சேர்ந்தவைகள் அல்ல.

### பழயகோட்டைப் பட்டாகாரர் அவர்கள்,

பழையகோட்டை பட்டாகாரரைப்போல் மாட்டு அபிவிருத்தி முயர்ச்சிகளை அநுஷ்டிக்கிறவர்கள் நமதுதேசத்திலேயே வேறொருவருமில்லை. பட்டா காரர் அதிகவிவேகமும் புத்திக் கூர்மையுமுள்ளவர். அவர்மாடுகளை வைத்துக் கொண்டிருக்கிற ஒழுங்கை இராஜப்பிரதிநிதிகள் கவர்னர்கள் முதற்கொண்டு புகழ்கிறார்கள். பட்டாகாரர் நல்ல மேய்ச்சல் பிரதேசத்தில் அநேக நூறு மாடுகளை முயர்ச்சி வகுப்புகளுக்கு ஏற்றபடி அமைத்திருக்கிறார். மாடு களின் க்ஷேமத்தைப் பட்டாகாரர் கவனிப்பது போல் நமது தேசத்திலேயே வேறொருவரும் கவனிக்கிறதில்லை.

### ஆலம்பாடி, காங்கயம் மாடுகளின் இலக்ஷணங்கள்

ஆலம்பாடி, காங்கயம் இவ்விருவகைமாடுகளும் நல்ல உருண்ட சரீரங் களுடனும் நன்றாய் அமைந்த சிறிய கால்களுடனுமிருக்கின்றன. பெரியவகை மாடுகளுக்கு கொம்புகள் அதிக நீளமாகவும் வட்டமாக வளர்ந்து கொண்டு மிருக்கின்றன. கொம்புகள் வெண்மை நிறமாகவுமிருக்கின்றன. குட்டைவகை மாடுகள் பட்டாகாரர் அவர்களால் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

இவ்வகைகளின் பசுக்கள் நல்ல கறவை மாடுகள். ஒருவனுக்கு ஒரு தோட்டமிருந்தால் அவன் பசுமாடுகளை மாத்திரம் தான் வீட்டில் கட்டி வைத்துக்கொள்வான், மற்ற மாடுகளை தோட்டத்தில் தான் வைப்பான். அவனுக்குப் புஞ்சை நிலம் இருந்தால் மாடுகள் இரவிலும் பகலிலும் அதி லேயே வைக்கப்படும். செம்மண் பூமியில் உஷ்ணமதிகமென்றும் கரிசல் மண் பூமி குளிர்ச்சியுள்ள தென்றும் மாடுகளிருப்பதற்கு நல்ல தென்றும் வியவஸாயிகள் செய்கிறார்கள். மாட்டுப்பட்டிகள் இவைகளில் மூங்கில் தட்டிகளால் அமைக்கப்படுகின்றன பட்டிகள் இரண்டு நாள்களுக்கு ஒரு விசை நகத்தப்படுகின்றன. இவ்விதமாக வியவஸாய நிலமுழுவதும் எரு விடப்படுகிறது. சில வியவஸாயிகள் மாட்டுத் தீனி நிமித்தம் கொஞ்சம் ஸ்தலத்தில் புல் சாகுபடியையும் அநுஷ்டிக்கிறார்கள். கொழுக்கட்டைப் புல் பயிர் செய்யப்படுகிறது.

199399



# வயது வந்த அவிவேக ஜனங்களுக்குக் கல்வி போதனை சம்பந்தமாக புகைப்படக் காக்ஷி ஏற்பாடுகள்.

நமது தேசத்தில் ஜனத்தொகையில் 10 இல் 9 பெயர்கள் கல்வியில்லாத வர்கள், அவர்களுக்கு உலகவர்த்தமானங்களே தெறிகிறதில்லை. சுகாதாரக் குறைவுகளோடும் சுகாதார தத்துவங்களை யநுஸரிக்காமலும் அவர்கள் வஸித்து வருகிறார்கள். கிராமங்களில் குட்டைகளும் குளங்களும் அசுத்த மாயிருப்பதால் நோய் மூலங்கள் அவைகளில் ஏற்படுகின்றன வென்று அவர் கள் அறிகிறதேயில்லை. தெருக்களும் நரசல் முதலிய அசுத்தங்களோடு இருக்கின்றன. கொசுவும் ஈயும் வியாதி மூலங்களை மனித சரீரத்தில் சேர்க்கின்றன வென்பதையும் அவர்கள் உணர்கிறதில்லை. அசுத்தங்கள் நமது கிராமங்களில் நிறம்பியிருப்பதால் தான் ஜனங்களின் தேகக் கூறு வரவர வலிவு குறைந்து போகிற தென்றும் ஜனங்களின் சீக்கிர மரணமும் சிசு மரணமும் அதிகமாகிக் கொண்டு வருகின்றன வென்றும் அவர்களுக்கு தெறிகிறதில்லை.

ஆகவே, கல்வி போதனை சம்பந்த மாகவும், சமூக க்ஷேமவிஷய ஞான போதனை சம்பந்தமாகவும், வியவஸாயம், தொழில் இவைகளின் சம்பந்த மாகவும், புகைப்படக் காக்ஷிகள் காட்டப் பட்டால் நமது தேசத்திய ஜன பஹுளம் இவ்வித போதனைகளில் ருசியை வஹிக்கக் கூடும். இது சம்பந்த மாக சென்னை ஸ்ரீராம கிருஷ்ண வித்தியாலயத்தில் நடத்தப்படும் முறைகளை அடியில் விவரிப்போம்:—

ஒவ்வொரு சனிக்கிழமை இரவிலும் 8-லிருந்து 9-30 மணி வரையிலும் உயர்வகுப்புப் பிள்ளைகளில் ஒருவர் போதனைகளை நடத்துகிறார், புகைப்பட காக்ஷிகள் அந்தந்த போதனைக்கேற்றபடி காட்டப்படுகின்றன. போதனைகள் வித்தியாலயத்தைச் சுற்றிவசிக்கும் அவிவேக ஜனங்களின் நிமித்தம் நடத்தப் படுகின்றன. புகைப்படகாக்ஷிகள் காட்டப்படுவதால்தான் ஜனங்கள் போத னைகளில் ருசியை வஹிக்கிறார்கள், மேலும் போதனை முடிவில் சுண்டலும் கற்கண்டும் கொடுக்கப்படுவதால் ஜனங்கள் ஒருநாள்கூட தவறாமல் போதனை களுக்கு வருகிறார்கள். போதனை விஷயங்கள் சுகாதாரவிஷயங்களாயாக வும் யிருக்கக்கூடாது. நடுவில், நடுவில் ராமாயணமும் பாரதமும் பாகவதக் கதைகளும் அந்நியதேச அதிசயங்களுமாக விருந்தால்தான் ஜனங்கள் ருசியை வஹிப்பார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயத்தில் இவ்விதமாக 15 போதனை பற்பலவிஷயங்களில் நடத்தப்பட்டன. அனேக போதனைகளில்

200 மனிதர்கள் வந்திருந்தார்கள். சுகாதார விஷயங்களிலும் புராணக்கதைகளிலும் அதிசயலோக விஷயங்களிலும் போதனைகள் காக்ஷிபடங்களோடு நடத்தப்பட்டன.

## சென்னைப் பாரெஸ்டு பஞ்சாயத்துகள்.

1929—30௵ய ரெவின்யூ போர்டாரின் பாரெஸ்டு பஞ்சாயத்து ரிபோர்ட்டிலுள்ள சிலமுக்கிய விஷயங்களாவன :—

1929—30ம்௵இல் 1047 பஞ்சாயத்துகளிருந்தன ; பஞ்சாயத்துக் காடுகளின் மொத்த விஸ்தீர்ணம் 3425·19 சதுரமைல்களாக விருந்தது. 1928–29ம் ௵ல் 1102 பஞ்சாயத்துகளிருந்தன, பஞ்சாயத்து காடுகளின் மொத்த விஸ்தீர்ணம் 3444·83 சதுரமைல்களாக விருந்தது. சங்கியையில் 55 பஞ்சாயத்துகளும் மொத்த விஸ்தீர்ணத்தில் 19·64 சதுரமைல்களும் குறைந்திருக்கின்றன ; அஸ்ஸெஸ்மெண்டில் 467 ரூபாயும் குறைந்திருக்கிறது. பஞ்சாயத்து சங்கியையில் குறைவு பஞ்சாயத்துகள் கலைப்செய்யப்பட்டதால் ஏற்பட்டது. மொத்த விஸ்தீரணத்தில் குறைவு ஏற்பட்டதற்குக்காரணம் குண்டூர் ஜில்லாவிலும் நெல்லூர் ஜில்லாவிலும் சில பஞ்சாயத்து காடுகள் பாரெஸ்டு டிபார்டுமெண்டுக்கு மாற்றப்பட்டதுதான். அவைகள் அப்படி மாற்றப்பட்டதற்குக் காரணம் இன்னதென்று ரிபோர்ட்டில் குறிக்கப்படவில்லை.

பாரெஸ்டு பஞ்சாயத்துகள், வெகு திறமானவகை யென்றும், ஏறக்குறைய சரியாய் வேலை செய்கிற வகை யென்றும், நன்றாய் வேலை செய்யாத வகை யென்றும் மூவகைகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. முதல் வகையில் 130 பஞ்சாயத்துகள் தான் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மற்றவைகள் அந்த 130 பஞ்சாயத்துகளைப் போல் வேலை செய்கிறதில்லை யென்பது விசனிக்கத்தக்கது. சில பஞ்சாயத்துகள் கலைக்கப்பட்டன வென்றும் தெரிய வருகிறது. அவைகள் எவ்வகைகளில் சரிவர வேலை செய்யவில்லை யென்றும் சொல்லப்பட வில்லை.

ஆதியில் பஞ்சாயத்துக் காடுகள் பஞ்சாயத்து நிர்வாஹத்திற்கு ஒப்புவிக்கப்படுவதற்கு முன் வெகு அதிருப்திகரமான நிலையில் இருந்தன. அவைகள் இப்பொழுது இருக்கிற சீரை கவனிக்குமளவில் பஞ்சாயத்தார்கள் தளராமல் உழைத்து அவைகளை அபிவிருத்தி செய்திருக்கிறார்களென்பது நன்றாய் புலப்படுகிறது. சென்ற வருஷத்தில் பஞ்சாயத்தார்கள் அபிவிருத்தி நிமித்தமாகவும், புதுக்கிணறுகளை வெட்டுவதற்காகவும், நாகதாளியை அழிப்பதற்காகவும் பாட்டைகளைப் போடுவதற்காகவும் ரூ. 41692-6-0 சிலவிட்டிருக்கிறார்கள். கவர்மெண்டார் அஸ்ஸெஸ் மெண்டுகளைக் குறைவாக



விதித்தால் அவர்கள் இன்னும் அதிகமாக அபிவிருத்தி வேலைகளைச் செய்யக் கூடும். நாகதாளி புதர்களை யழிக்கவேண்டிய விஷயத்தில் போர்டார் ஆர்ஸனிக் பெண்டாக்ஸைடை உபயோகித்துப் பார்த்தார்களாம். அவர்களின் முயர்ச்சி பயன் பட்டதா வென்று தெரியவில்லை. நாகதாளிப் புதர்களால் பலவிதத் தீமைகள் மனிதனுக்கும் மாட்டுக்கும் ஏற்படுகிற படியால் மேற்கூறிய முயற்சியின் சம்பந்தமாக போர்டார் விவரங்களை சீக்கிரத்தில் குறிப்பிடுவார்களென்று கோறுகிறோம்.

போர்டாரின் ரிபோர்ட்டில் சில பஞ்சாயத்துகளுக்கு சட்ட அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது தப்பர்த்தத்தை விளைக்கக் கூடும். போர்டார் சொல்லும் சட்ட அந்தஸ்து என்பது கம்பவுண்டிங்கு அதிகாரமே யொழிய பஞ்சாயத்துகளுக்கு சட்ட பூர்வமாய் அதிகாரங்களையும் முயற்சிகளையும் செலுத்த அந்தஸ்தென்பதேயல்ல. பஞ்சாயத்தார்கள் பிரதி மஹா நாட்டிலும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிற சட்ட பூர்வமான அந்தஸ்து இதல்ல. கம்பவுண்டிங்கு அதிகாரமும் 32 பஞ்சாயத்துகளுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. 130 பஞ்சாயத்துகள் வெகுதிறமாக வேலை செய்கின்றன வென்று கூறப்பட்டிருக்கிற பொழுது ஏன் 32 பஞ்சாயத்துகளுக்கு மாத்திரம் இவ்வித அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ தெரியவில்லை, இன்னும், ஏன் இந்த 32 பஞ்சாயத்துகளுக்கும் பாரெஸ்டு ஆபீஸரின் அதிகாரங்களெல்லாம் கொடுக்கப்பட வில்லையோ தெரியவில்லை.

## ஏழ்மைத் தனமும் நோய்களும்.

ஏழ்மைத்தனத்தினால் தான் மனிதன் குறைந்த ஆஹாரத்தை அடைய வேண்டியிருக்கிறது. குறைந்த ஆஹாரத்தை அடைவதாலேயே வியவஸாய ஊழியர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் பலக்குறைவு உண்டாகிறது, நோய்களும் ஏற்படுகின்றன. மாடர்ன் ரிவியூ பத்திரிகையில் டாக்டர் ரஜனி காந்ததாஸ் இவ்விஷயத்தைப்பற்றி எழுதியிருக்கிறார். நம்முடைய தேசத்தில் கிராம ஜனங்கள் வெகு கேவல தரித்திர நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு வெகு குறைவில் கிடைக்கிறபடியால் அவர்கள் மலேரியா போன்ற கொடிய நோய்களை அடைகிறார்கள். மே நாட்டு தேசங்களில் ஜனத்தொகையின் மரணசங்கியை குறைந்து வருகையில் நமது தேசத்தில் அது பன் மடங்கு அதிகரித்துக் கொண்டே வருகிறது. உணவுக் குறைவால் ஜனங்கள் நோய்களை அடைந்து மாண்டுபோவதுடன் மீதியாகப்பிழைத்திருக்கும் ஜனங்களின் சரீரவலிமையும் குறைந்து போகிறது. வியவஸாய ஊழியர்களும் தொழிலாளிகளும் பலக்குறைவை யடைவதால் அவர்கள் தங்களுடைய பயிர் முயர்ச்சிகளையும் தொழில் முயர்ச்சிகளையும் ஸரிவர அநுஷ்டிக்கக் கூடுகிற

தில்லை. அது காரணம் பற்றியே நம்முடைய தேசத்திய வியவஸாய உற்பத்தியும் தொழிலுற்பத்தியும் வரவரக்குறைந்து போகின்றன. நம்முடைய தேசத்திலுள்ள 32 கோடி ஜனங்களுக்கும் நபர் ஒன்றுக்கு சராசரியில் வேண்டிய அளவில் 3 இல் 2 பங்கு உணவுதான் கிடைக்கிறது. இக்காரணத்தினாலேயே 1881-ம் வருஷத்திலிருந்து நமது தேசத்து ஜனங்களின் சரீரவலிமை வரவரக் குறைந்து வருகிறது.

## கிராமங்களின் நிலையை உயர்த்த வேண்டிய நிமித்தம் சிலயோசனைகள்.

நம்முடைய தேசத்தில் ஜனத்தொகையில் பெருபான்மையோர் கிராமங்களில்தான் வஸிக்கிறார்கள். நமது தேசத்தில்தான் மற்ற எந்ததேசத்தையும் காட்டிலும் அதிக கிராமங்களிருக்கின்றன. கிராமங்களின் முயர்ச்சிகளால் தான் நம்முடைய ஜனத்தொகைக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் அவ்வளவும் விளைக்கப்படுகின்றன. மேநாட்டுதேசங்களில் ஜனத்தொகையில் ஏறக்குறைய பாதிக்குமேல் தொழிலாளிகளாயிருக்கிறார்கள். தொழிற்சாலைகள் எல்லாம் பட்டணங்களில் இருக்கிறபடியால் பட்டண வாஸத்தைச்செய்கிற ஜனங்கள் அத்தேசங்களில் அதிகம். நம்முடைய தேசத்தில் வியவஸாயம் தான் முக்கிய விருத்தியாக விருப்பதால் ஜனத்தொகையின் பெரும்பான்மையோர் கிராமங்களிலேயே வஸித்து வரவேண்டியது அவசியமாக விருக்கிறது. அப்படி இருக்கையில் நம்முடைய தேசத்தில் கிராம ஜனங்கள் கிராமங்களை விட்டுவிட்டு பட்டணங்களுக்குப் போய் வாஸமாக விருக்க விரும்புகிறார்கள். இக்காரணத்தினால்தான் கிராமங்கள் அழிந்துபோகின்றன. சென்னை மராஹாணத்தில் பலகிராமங்கள் அழிந்துபோய்விட்டன. இவ்விதமாக கிராமங்கள் அழிந்துபோனால் வியவஸாய முயர்ச்சிகள் வரவரக்குறையும். வியவஸாய ஊழியத்திற்கு வேண்டிய ஜனங்களின் சங்கியையும் குறையும். பட்டணங்களில் அதிகஜனங்கள் போய்ச்சேர்வதால் பட்டணங்களின் சுகாதாரம் குறைவதுடன் ஜீவனோபாய மில்லாமை அதிகரிக்கிறது. ஆகவே ஜனங்கள்கிராமங்களை விட்டுவிட்டு பட்டணங்களுக்கு வாஸமாய்ப் போவது நிற்கவேண்டும். இது எப்படி நிற்கும், பட்டணசௌகரியங்கள் அவைகளில் ஏற்படவேண்டும், வைத்திய வஸதியும் சுகாதாரச்சீரும், ஜீவனோபாய வழிகளும், கூட்டுறவு சங்கங்களும் உத்தியான வனங்களும் காக்ஷிசாலைகளும் அவைகளில் ஏற்படவேண்டும்.

இப்பத்திரிகையில் இவ்விஷயத்தைப்பற்றி பலதடவை எழுதியிருக்கிறோம். கிராம டிஸ்பன்சரிகள் ஏற்படவேண்டும், அவைகளுக்கு நியமிக்கப்படும் வைத்தியர்களைக்கொண்டு கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் சாதாரண நோய்களின் சிகித்ஸை முறைகளில் பயிர்ச்சி செய்யப்படவேண்டும்.



## வியவஸாய இலாகாவின் நவீன முயர்ச்சி நிரூபணர்கள்.

விவஸாய இலாகாவின் நிரூபணர்கள் (Demonstrators) சில முக்கிய இடங்களில் மாத்திரம் போய் வியவஸாய நிரூபணங்களைச் செய்துவிட்டுத் தங்களுடைய கடமை அதோடு தீர்ந்தது என்று எண்ணுகிறார்கள். அவர்கள் கொஞ்சம் கூடத் தாங்கள் வியவஸாய அபிவிருத்திக்கு உழைக்கிறவர்களென்றும் தங்களின் முயர்ச்சிகள் தக்கபடி யநுஷ்டிக்கப்பட்டால் தேசத்தின் தரித்திர நிலை குறையுமென்றும் நினைக்கிறதில்லை. அவர்கள் நிரூபணங்களை வியவஸாயிகளுக்கு கிராமங்களிலேயே அவரவர் நிலங்களுக்கு அருகிலேயே போய்ச் செய்ய வேண்டும். அவர்கள் அப்படிச் செய்வார்களாகில் வியவசாயிகள் தங்களுக்குப் பயிர் முயர்ச்சிகளின் சம்பந்தமாகவும், மாடுகளின் சம்பந்தமாகவும், எரு சம்பந்தமாகவும் பலவித சங்கடங்களில் சீர் முறைகளைத் தெரிந்து கொள்ளக்கூடும். நிரூபணர்கள் கிராம ஜனங்களோடு கலந்து கொண்டு அவர்களுக்கு யோசனைகளைச் சொன்னால் தான் அவர்களுடைய ஊழியம் பயன்படும்.

## பஞ்சாயத்து பாரெஸ்டுகளின் மேய்ச்சல் சௌகரியம்.

கவர்மெண்டார் மேய்ச்சல் பூமிகளை பஞ்சாயத்துகளின் நிர்வாஹத்திற்கு ஒப்புவித்ததே ஒரு பெரிய நன்மையாகும். நம்முடைய கிராமங்களிலுள்ள மாடுகளின் க்ஷேமத்திற்கு அவைகள் தான் முக்கியமானவை. மாடுகள் தினந்தோறும் இவ்வித இடங்களில் போய் மேய்ந்தால் அவைகளின் ஆரோக்மும் சரீர பலமும் சரியாய் அமையும். பஞ்சாயத்துக் காடுகளிலுள்ள புல் பூமிகள் ஸர்வே செய்யப்பட வேண்டும். அவைகளிலுள்ள பச்சைகளின் உணவு குணங்கள் பரிசோதிக்கப்பட வேண்டும். உணவு குணத்தில் உயர்வான புல்களும் பச்சைகளும் பயிர் செய்யப்பட வேண்டும். நல்ல மேய்ச்சல் சௌகரியமிருக்கிற இடங்களில் மாடுகள் பலமுள்ளவைகளாகவும், பார்வைக்கு நன்றாயும் இருக்கின்றன. சென்னைக்கருகில் புல் பூமிகள் என்று சொல்லப்பட்ட வனாந்தரங்களில் நின்று கொண்டிருக்கும் 100க்கணக்கான மாடுகளையும், பாருக்கள், மைசூர், சேலம், கோயமபுத்தூர் இவ்விடங்களில் மேயும் மாடுகளையும் பாருங்கள். சென்னை மாடுகளின் கேவலஸ்திதியும் மற்ற இடங்களின் மாடுகளின் உயர்வுஸ்திதியுமே புல்ப்பயிர் பேய்ச்சல் நிலங்களின் அநுஷ்டிக்கப்படவேண்டு மென்பதை நன்றாய் நிரூபிக்கும்.

# அரிசி

மேனாட்டு தேசங்களில் இடலி, ருஷியா தென் அமெரிக்கா இவைகளில் நெல் பயிர் அதிகமாகிவிட்டது. சீனாவிலும் பலப் பிரதேசங்களில் நெல் சாகுபடியே அநுஷ்டிக்கப்படுகிறது. பர்மாவில் நெல்சாகுபடி முக்கியப் பயிர்த்தொழில். உலகமெங்குமே நெல் விளைகிறதுபோல் காணப்படுகிறது. பர்மா தேசத்தில் தற்போதில் உயர்ந்த அரிசி சென்னைப் படியால் ரூபாய்க்கு 10படி வீதம் விற்கிறது. பர்மாதேசத்திய உயர்வு அரிசி தென் இந்தியாவின் உயர்ந்த அரிசியைக் காட்டிலும் திறமானது. தற்போதில் பர்மா தேசத்து நெல் வியவஸாயிகள் அதிக விளைச்சலாலும் குறைந்த விலையினாலும் கஷ்டப்படுகிறார்கள். நெல்லை விலைக்குக் கேட்பவர்களை கிடையாதாம். ஆகவே வியவஸாயிகள் சர்க்கார் வரிகளை செலுத்தக் கூடுகிற தில்லையாம். பர்மா கவர்னராகிய சிறப்பு வாய்ந்த ஸர்ஜோஸப் அகஸ்டஸ் மாங்கு ஸிங்லாவில் ஒரு ஊரில் உபந்நியஸிக்கையில் நெல் சாகுபடி உலகமெங்கும் அநுஷ்டிக்கப் படுகிறபடியாலும், எவ்வூரிலும் அதிகவிளைச்சல் ஏற்பட்டிருப்பதாலும் நெல் விலை இறங்கிவிட்டதென்றும் கர்மம் தான் இவ்விதக் கோளாறுகளுக்குக் காரணமென்றும் அவர்கள், ஸ்ரீ புத்தருடைய சிங்கலவாத சூத்திரத்தை வாசித்து அதன்படி நடந்து பூமியிலிருந்து வரும் வரும்படியில் $\frac{1}{4}$ பங்கைச் சிலவழிக்காமல் வைத்து வந்திருந்தால் ஒரு கஷ்டமும் வந்திராதென்றும கூறினார். ஆனால் இந்திய அரிசிக்கும், பர்மிய அரிசிக்கும் தக்க முயர்ச்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டால் அவைகளை பல தேசங்களில் வாங்குவார்கள். இடலி தேசத்து அரிசியும், அமெரிக அரிசியும், இந்திய அரிசியை விடவும். பர்மிய அரிசியை விடவும் தாழ்ந்தவைகள். ஆனால் அவைகளை அநேக வகுப்புகளாகப் பகுத்து ஒழுங்கு பண்ணி விளம்பரப் படுத்துவதால் அவ்வரிசிகள் விலையாய் விடுகின்றன. இந்திய அரிசியும், பர்மிய அரிசியும் அவ்விதமாகச் செய்யப்பட்டால் அவைகள் அந்நிய நாடுகளில் நன்றாய் விலைப்போகக் கூடும்.

# நமது உணவு

(136-ம் பக்கத்திலிருந்து தொடரப்பட்டது.)

### விடாமின் பீ.

பீ விடாமினானது செடிகளால் அவைகள் மண்ணிலிருந்தும் வாயுவிலிருந்தும் கிரஹிக்கிற வஸ்துக்களிலிருந்து செய்யப்படுகிறது. மண்ணின்குணமும் எருவஸதியும் நீர்பாசன வஸதியும் சரியாயிருந்தால் இவ்விடாமின் அதிக அளவில் உண்டாகப்படுகிறது. பீ விடாமின் செடிகளின் விதைகளிலும் பழங்களிலும் இருக்கிறது. கொஞ்சஅளவில் இலைகளில்கூட இருக்கிறது. மனிதனும் மிருகங்களும் விதைகளையும் பழங்களையும், இலைகளையும் புசிக்கும்பொழுது



இவ்விடாமின் அவைகளுடைய சரீரத்தில் சேர்ந்து சரீரவளர்ச்சி, மராமத்து, ஜீரணம், கழிவுப் பொருள்களின் விசர்ஜனம் இவ்வகைகளில் உபயோகப்படுகிறது. நரம்பு சர்மம் இவைகள் சரியாக வேலைசெய்யவேண்டிய வழியிலும் உபயோகப்படுகிறது. மிருகங்களிலும் மனிதர்களிலும் இவ்விடாமின் மூளையிலும், ஹிருதயத்திலும், லிவரிலும், மூத்திர கோசங்களிலும் குடலிலும் நிறைந்திருக்கிறது. மனிதன் மிருகங்களின் மேற்கூறிய அவயவங்களைப் புசித்தால் அவன் இவ்விடாமினை அதிகமாக அடைவான். குழந்தைகளையுடைய மாதர்களின் ஸ்தன்யத்திலும் இவ்விடாமின் போய்ச்சேர்கிறது. எருமைமாடுகளின் பாலிலும் பசுவின் பாலிலும், வெள்ளாட்டின் பாலிலும் அது இம்மாதிரியே சேர்கிறது. பக்ஷிகளின் முட்டைகளிலும் அது சேர்கிறது. பாலும், முட்டையும் தான் விடாமின் பீ யைநிரம்ப வஹிக்கிற உணவுப் பொருள்கள். தாயார்கள் விடாமின்பீ நிரம்ப உள்ள உணவுப்பொருள்களை அதிகமாகப்புசிக்கவேண்டும். விடாமின்பீயானது கொழுப்புகளிலும் எண்ணைகளிலும் இராது. அதுவெள்ளைச்சக்கரையிலும் இல்லை. பழுப்புச் சக்கரையிலும் வெல்லத்திலும் தேனிலும் அல்ப அளவில் அருக்கிறது.

பீ விடாமின் அதிகமாக விருக்கிற வஸ்துக்களாவன:—

1. கோதுமை, பார்லி, சோளம், கம்பு, கேழ்வரகு.
2. பருப்புகள், பட்டாணி, அவரை, கொள்ளு.
3. எல்லாக் கொட்டைகளும்.
4. பச்சைக்கீரைகள், பசளைக்கீரை, முள்ளங்கிக்கீரை, தக்காளிப்பழம்
5. பால், முட்டை, லிவர்.

யீஸ்டில் பீ விடாமின் நிரம்ப இருக்கிறது. ஆனால் யீஸ்டு உணவுப் பொருளாக உபயோகப்படுகிறதில்லை. மேர்ச்சொல்லிய ஐந்து வகைப் பொருள்களை அவைகளின் இயற்கை நிலையிலேயே நாம் புசித்தால் நாம் விடாமின் பீயை நிரம்ப அடைவோம். ஆனால் நாம் அவைகளைப் பலவித மாறுபாடுகளோடு புசிக்கிறோமாதலால் விடாமின் பீ அவைகளிலிருந்து நீங்கிவிடுகிறது. அரிசியில் விடாமின் பீ வெகு குறைவாக விருக்கிறது. நெல்லை மில்லில்குத்தினாலும் அரிசியை மாவாக அரைத்தாலும் விடாமின் நீங்கிவிடுகிறது. நெல் புழுக்கப்பட்ட பிறகு விடாமின் பீ மணியோடு ஒட்டிக்கொள்கிறது, அழிகிறதில்லை. ஆனால் ஏ விடாமினானது நெல் புழுக்கப்படும்பொழுது நசித்துப் போகிறது. புழுங்கல் அரிசி அழுக்காயிருப்பதால் அதை தண்ணீரில் போட்டு சுத்தப்படுத்துகையில் விடாமின் பீ போய்விடுகிறது. சாதம் வடித்த கஞ்சிகளில் விடாமின் பீ தங்குகிறது. ஆகையால் நாம் அதை உட்கொள்ள வேண்டியது அவசியம். அரிசியில் பீ விடாமின் குறைவாகவிருப்பதால் நாம் பருப்புகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால்

பருப்பை அளவிற்கு மேல் சாப்பிடக்கூடாது. சாப்பிடும் சாதத்தின் அளவில் 5 இல் ஒரு பாகம் பருப்புத்தான் புசிக்கப்பட வேண்டும். அரிசி சாதத்தோடு மேற்கூறிய பருப்பு முதல் பி விடாமின் உள்ள உணவுப் பொருள்களைச்சேர்த்துச் சாப்பிடா விட்டால் தேக வளர்ச்சி சரியாக ஏற்படாது. தக்காளிப்பழம் வேர்கடலை கிரைகள் முதலிய வஸ்துக்களை அரிசிச் சாதத்தை உண்பவர்கள்ச் சேர்த்துக்கொள்ள வேண்டும். பாலும் தயிரும் கூட அதிகமாக உபயோகிக்கப்பட வேண்டும். ஆனால் அரிசிச் சாதத்தோடு சாப்பிடவேண்டிய முக்கிய பொருள் தக்காளிப் பழம் தான். மேலும் தேக ஆரோக்கியத்தைச் சரியான ஒழுங்கில் வைக்கக் கூடியது தக்காளிப்பழம். கோதுமாவை உபயோகிக்கிறவர்கள் கோதுமையை வீட்டிலேயே அரைத்து உபயோகித்தால் அதிலுள்ள விடாமின் பி போய்விடாது. பஞ்சாபிகள் கோதுமையை வீட்டிலேயே தான் ரொட்டி தட்டுகிறார்கள். சிலர் அரிசிச் சாதத்தையும் கோதுமை ரொட்டியையும் உபயோகிக்கிறார்கள். இது நல்ல உணவு. அவைகளோடு பாலும், காய்கறிகளும் உபயோகிக்கப் படவும் வேண்டும். கோதுமையை மாவாக அரைத்து நெடுநாள் வைத்துக் கொண்டால் விடாமின் பியும், புரோடீன்களும் உலோக உப்புக்களும் போய் விடும். அக்காரணத்தினால் தான் ஐரோப்பிய ரொட்டிகள் இந்தியா சப்பாத்திகளை விட உணவு குணத்தில் குறைந்தவைகளென்று சில ஆங்கில நிபுணர்களே கூறுகிறார்கள். இந்தியாவில் சோளம் கேழ்வரகு முதலியவைகளை உண்பவர்கள் அவைகளை பி விடாமின் போகாதபடியே உண்கிறார்கள். ஆனால் அவர்களும் பால் தயிர், நெய் இவைகளை சேர்த்துக்கொண்டால் அவர்கள் விடாமின் ஏவை தக்கபடி அடைவார்கள்.

பி விடாமினானது சரீரக் கட்டிட வேலைக்கும் மராமத்திற்கும் அவசியமாக இருப்பதுடன் அது மூளையையும், நரம்புகளையும் தசைகளையும் ஹிருதயத்தையும், லிவரையும், ஜீர்ண கோசங்களையும், மூத்திர கோசங்களையும் ஆரோக்கியத்தில் அமைத்து அவைகளுக்கு வலிவைக் கொடுக்கிறது. உணவுகளில் விடாமின் பி குறைவாக இருந்தால் சாப்பாட்டில் ருசி இராது. வயிறெடுப்பு அஜீர்ணம் மலச்சிக்கல் முதலிய கோளாறுகள் ஏற்படுகின்றன. அரிசியை அதிகமாகக் களைந்தால் அதிலுள்ள விடாமின் போய்விடுகிறது. அரிசியைக் களையாமல் குக்கர்களில் சமைப்பது போல மூடி ஆவியில் சமைப்பது தான் நல்ல முறை. காய்கறிகளை சமைக்கும் போது ஜலத்தில் சிலர் சோடாவைச் சேர்க்கிறார்கள். சோடா சேர்க்கப்படுவதால் விடாமின் பி போய் விடுகிறது.

I விடாமின் பியை நிரம்பவுள்ளிருக்கும் பொருள்களாவன:— யீஸ்டு, முட்டை, லிவர், தக்காளிப்பழம், பசலைக்கீரை, முள்ளங்கிக்கீரை முதலியவைகள்.



II விடாமின் பியை நிரம்ப வுள்ளிக்காமல் போனாலும் ஏறக்குறைய வேண்டிய அளவில் வுள்ளிக்கிற வஸ்துக்களாவன. கோதுமை, பார்லி, சோளம், கம்பு, கேழ்வரகு, ஓட்ஸ், அவரை, பட்டாணி, பருப்புகள், கொள்ளு, கோஸ் முட்டை, காரட், வெங்காயம், பால்.

III விடாமின் பியைக் குறைவாக உடைத்தாயிருக்கிற பொருள்களாவன; வெள்ளை ரொட்டி, மில்லில் அரைக்காத அரிசி, மூங்கில் கொழுந்துகள், வாழைப்பழம், கத்திரிக்காய், உருளைக் கிழங்கு, சக்கரை வெள்ளிக் கிழங்கு, திராக்ஷைப்பழம், பேரீச்சம் பழம், எலுமிச்சம் பழம், ஆரஞ்சு, பப்ளிப்பழம்.

IV விடாமின் பியை வெகு கொஞ்ச அளவில் உடைத்தாயிருக்கிற பொருள்களாவன. வெண்மையான மாவுகள், மில்லில் குத்தப்பட்ட அரிசி, வெண்ணை, கொழுப்புகள், எண்ணைகள், சக்கரை, தேயிலை, காபி தேன்.

## நல்ல பூஷணி.

(ஸ்ரீமான் பி. எஸ். பார்த்தசாரதி ஐயங்கார் பி. ஏ., பி. எல்., எழுதியது.)

### நல்ல பூசணிக்காய்.

இதைத் தெலுங்கில் 'கும்மடி பண்டு' என்றும், இந்துஸ்தானி பாஷைகளில் 'கத்து' அல்லது 'மீடா கத்த' என்றும், இங்கிலீஷில் 'பம்ப்கின்ஸ்' என்றும், லாட்டின் பாஷையில் 'கூக்கர் பிடாமாக்ஸிமா' அல்லது 'மாஸ்கேடா' என்றும் சொல்லுவார்கள். சில ஜில்லாக்களில் இதைப் பரங்கிக்காய் என்றும் சொல்லுவதுண்டு.

### பொது.

இது இந்தியாவில் எல்லா இடங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. சிலர் இதைப் பரங்கிக்காய் என்றபோதிலும் இந்தத் தாவரத்தின் தாய்நாடு இந்திய தேசமே. தற்காலத்தில் இதை ஆசியா கண்டம் முழுவதும் பயிரிடுவதேயல்லாமல் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களில்கூட இதை ஏராளமாய்ப் பயிரிடுகின்றனர். நல்ல பூசணி 'கூக்கர் பிடேஸி' என்னும் தாவர வகுப்பைச் சேர்ந்தது. வெள்ளரி, சுரை, பீர்க்கு, புடல் முதலிய அனேகக் கறிகாய்கள் கூட இதே வகுப்பைச் சேர்ந்தவை. பூசணி நல்ல இலாபம் தரும். ஆகையால் இதை அனேக ஏழைகள்கூடத் தம் வீட்டுப் புறக்கடைகளிலும் கொல்லைகளிலும் ஏராளமாய்ப் பயிரிடுகின்றனர். விவசாயிகள் சாதாரணமாய்ச் செய்யும் பயிர்களுடன் சித்தூர் ஜில்லா, பொம்ம சமுத்திரம் முதலிய இடங்களில் சிறு குடிகள்கூட செய்வதுபோல இதையும் வளர்த்தால் அவர்களுக்கு ஓர் நல்ல பொருள் ஆதார[illegible]

## சீதோஷ்ணஸ்திதி முதலியன.

நல்ல பூசணி உஷ்ண நாடுகளிலும், மித உஷ்ண நாடுகளிலும் நன்றாய்ப் பயிராகும். சுமார் 6,000 அடி உயரத்திற்கு மேல் இருக்கும் குன்னூர், உதகமண்டலம் முதலிய மலைப்பிரதேசங்களில்கூட இது நன்றாய் வளர்ந்து காய்க்கின்றது.

இதற்கு அதிக மழை அவசியமில்லை. கிரமமாய் நீர் வார்த்து வந்தால் போதும். வருஷத்தில் முப்பது முதல் நாற்பது அங்குலத்திற்குள்ளேயே மழை பெய்யும் 'தத்தமண்டலம்' என்னும் பல்லாரி, கர்னூல் ஜில்லாக்களிலும், மதனபல்லி, திருவண்ணாமலை, திருச்சினாப்பள்ளி முதலிய இடங்களிலும் நல்ல பூசணி ஏராளமாய்ப்பயிர் செய்யப்படுகிறது. சென்னைபுரிக்குப் பெரும்பாலும் திருவண்ணாமலைப் பிராந்தியத்திலிருந்தே பூசணிப்பழம் ஏற்றுமதி செய்து அனுப்பப்படுகிறது.

## நிலம்.

பூசணி எல்லா விதமான (பயிரிட லாயக்கான) நிலங்களிலும் பயிராகும். ஆனால் மணல் கலந்த களிமண் அல்லது செவ்வல நிலமே இதற்கு மிகவும் நல்லதென அமெரிக்காவில் கண்டுபிடித்திருக்கின்றனர். மணல் மிகவும் குறைவாகக் கலந்திருக்கும் அதிக வளமான களிமண் நிலங்களிலும் கூடச்செடிகள் நன்றாய் வளர்ந்து காய்க்கும். ஆனால் பூசணிப்பழங்கள் இனிப்பாய் இருக்கமாட்டா. பழங்களும் இரண்டொரு மாதத்திற்குள்ளேயே அழுகும்.

முலாம்பழச் செடிகளும் வெள்ளரிச் செடிகளும் இது வரையில் பயிரிடாத சீர்திருத்திய புது நிலங்களில் விரை விரைத்தால் நன்றாய் வளர்ந்து காய்ப்பதில்லை. ஆனால் நல்ல பூசணியும், கலியாண பூசணியும் இப்படிக் கொத்த புதிதாய் பயிரிடும் நிலங்களில்தான் மிகவும் நன்றாய்க் காய்க்கும்.

## உழுதல் குழிவெட்டல் முதலியன.

வயல்களில் பூசணியைப் பயிரிட்டால், நிலத்தை நன்றாய் விரை நடுவதற்கு இரண்டு மூன்று மாதம் முன்னமே உழவேண்டும். பிறகு நிலத்தில் ஆறு அடி தூரத்திற்கு ஒரு குழி வீதம் வெட்ட வேண்டும். ஒவ்வொரு குழியும் சுமார் மூன்றடி ஆழமும் இருக்க வேண்டும். மேலே படரும் காய்கறிச் செடிகளுக்கெல்லாம் இப்படி ஆழமாய்க் குழி வெட்டி மண்ணைத் தளர்த்தி அதிக எருவு இடுவது மிகவும் அவசியம். சிலர் வீடுகளில் பூசணி முதலிய செடிகளை வளர்க்கும் போது, நிலத்தை ஒரு அடி ஆழமும், ஒரு அடி அகலமும் கூடக் கொத்தாமல், நிலத்தை ஒரு காண்டிக் காம்பால் கொஞ்சம் கிளறி நட்டு விடுகிறார்கள். ஆகையால் அந்தச் செடிகள் நன்றாய் வளர்ந்து காய்ப்பதில்லை.



## எருவு.

பூசணிச் செடிகளுக்கு அதிக எருவு போடவேண்டும். நன்றாய் மக்கிய மாட்டுச்சாணம், குதிரைச்சாணம், தெருக்குப்பை முதலியவைகள் நல்ல எருக்கள். குழியை நிறப்புவதற்கு முன்னாகவே, சாணி எருவை வெட்டிய மண்ணுடன் நன்றாய்க் கலந்துவிட வேண்டும். அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் பூசணிச் செடிக்கு இரசாயன எருக்களையும் போடுகிறார்கள். ஏகரா ஒன்றுக்கு 1,000 முதல் 1,500 பவுண்டு எடை கலப்பு எருவைப் போடுகிறார்கள். இதில் 'அம்மோனியா' 50 பவுண்டு எடையும், 'பாஸ்பாரிக் ஆஸிட்' 60 பவுண்டு எடையும் பொடாஷ் என்னும் மர உப்பு அல்லது 'சாம்பல்காரம்' 80 பவுண்டு எடையும் இருக்க வேண்டும். மேல் சொன்ன 'அம்மோனியா' கிடைப்பதற்காக 660 முதல் 1,000 பவுண்டு எடை பருத்திக் கொட்டைப் பிண்ணாக்கை யாகிலும், 400 முதல் 600 பவுண்டு எடை உலர்ந்த இரத்தத்தை யாகிலும், 200 முதல் 300 பவுண்டு எடை 'சல்போட் ஆப் அம்மோனியாவை' யாகிலும் எருவுடன் கலக்கிறார்கள். இந்தியாவில் பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பதில்லை. ஆகையால் புங்கன் பிண்ணாக்கு, ஆமணக்கு, வேர்கடலை, வேம்பு முதலிய இவற்றின் பிண்ணாக்குகளை அதே அளவாய்ப் போடலாம். 60 பவுண்டு எடை 'பாஸ் பாரிக் ஆஸிட்' கிடைப்பதற்காகச் சுமார் 600 பவுண்டு எடையுள்ள 'சூப்பர் பாஸ்பேட்' எருவைக் கலக்கிறார்கள். 80 பவுண்டு பொடாஷுக்காக சுமார் 300 பவுண்டு எடையுள்ள மட்ட 'சல்பேட் அப் பொடாஷைக்' கலக்கிறார்கள்.

பூசணிச் செடிகளுக்குச் சாணி எருவேயல்லாமல், பசுந்தாள் எருவு, மீன் எருவு, உலர்ந்த இரத்தம், தோல் பதம் செய்யும் போது கழித்த ஆட்டு மயிர் முதலிய இந்திர எருக்களும் மிகவும் நல்லவையாம். பூசணிக்கு எருவு அதிகமான போதிலும் குற்றமில்லை. ஆனால் சற்றே குறைந்தாலும் நன்றாய்க் காய்ப்பதில்லை. இலைகளுக்குப் பிஞ்சு விட்ட பிறகு சாணி, பிண்ணாக்கு முதலியவைகளைக் கரைத்து, ஏழெட்டு நாள் அழுகவைத்து இரண்டொரு தரம் நீரை வார்த்தால் மிகவும் நல்லது.

அமெரிக்காவில் ஒவ்வொரு செடிக்கும் உழுத நிலத்தில் சுமார் ஒன்றரை அடி சதுரமும் ஓரடி ஆழமும் உள்ள பள்ளம் தோண்டுவார்கள். பள்ளத்திலிருந்து எடுத்த மண்ணுடன் மேலே சொன்ன எருக்களை நன்றாய் மண்வெட்டி முதலியவற்றால் கலந்து விடுவார்கள். பிறகு இந்த எரு கலந்த மண்ணை அந்தக் குழியில் போடுவார்கள். எருவும் கூடக்கலந்திருப்பதால் இந்த எரு மண் பள்ளத்தின் மேலே கூட சுமார் ஒரு அடி உயரம் இருக்கும். இதன் விரையை மண்ணின் மேலே நட்டு மூடுவார்கள். ஒவ்வொரு குழியிலும் சுமார் ஆறு விரைகளை விரைத்து, முளைத்துக் கொஞ்சம் பெரிதான பின், மிகவும் நன்றாய் வளர்ந்து வரும் ஒன்று அல்லது இரண்டு செடி

களை மட்டும் வளரவிட்டு மற்றவைகளைப் பிடுங்கி எறிவார்கள். இங்கே சாதாரணமாய் எட்டடி தூரத்திற்கு ஒரு செடி வீதம் நடுகிறார்கள்.

### நீர் பாய்ச்சுதல் முதலியன.

நல்ல பூசணியில் அநேக ஜாதிகள் இருக்கின்றன. கோடை காலத்தில் பயிராகும் ஜாதி ஒன்றும், மழை காலத்தில் பயிராகும் மற்றொரு ஜாதியும் முக்கியமானவை. கோடைகாலச் செடிகளைப் பிப்ரவரி மாதம் ஆரம்ப முதல் ஏப்ரல் மாதக் கடைசி வரையிலும் நடுகிறார்கள். மழைகாலப் பூசணியைத் தென்மேற்குக் காற்றின் மழையுள்ள இடங்களிலெல்லாம் ஜூன் மாதம் 15-ம் தேதியிலிருந்து ஜூலை மாதம் 15-ம் தேதி வரையில் விரைக்கிறார்கள். இந்தியாவில்கூட, ஒவ்வொரு குழியிலும் மூன்று, நான்கு விரைகளை விரைத்த போதிலும், நன்றாய் வளர்ந்து வரும் ஒரு சிறு செடியை மட்டும் விட்டு மற்றவைகளை யெல்லாம் பிடுங்கி எறிகிறார்கள். மேற்சொன்ன இரண்டு ஜாதிகளுக்குப் பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் விரைக்கும் கோடைகாலச் செடிக்கு நன்றாய் நீர் பாய்ச்ச வேண்டும். அதிக மணல் நிலமானால், வாரத்திற்கு இரண்டு முறையாகிலும் நீர் பாய்ச்ச வேண்டும். மழைகாலப் பயிருக்கு அவ்வளவு நீர் அவசியமில்லை.

கோடைகாலச் செடிகளை நிலத்திலேயே படர்ந்து காய்க்க விடுவார்கள். மழைக்காலச் செடிகளை வீட்டுக் கூரைகளின் மேல் ஏற்றிப் படர விடுகிறார்கள். இவைகள் நிலத்தின் மேலேயே படர்ந்தால் சில காய்கள் அதிக மழையில் அழுகிப் போகின்றன.

### களை எடுத்தல்.

பூசணி பயிராகும் நிலத்தை, செடிகள் நன்றாய் வளர்ந்து, நிலமெல்லாம் கொடிகள் பரவும் வரையில் களையெடுத்துச் சுத்தமாய் வைக்க வேண்டும். சரியாய் எரு போட்டு நீர் பாய்ச்சினால் பூசணிச்செடிகள் அதிக சீக்கிரமாய் வளரும். இருபத்து நான்கு மணி நேரத்தில் இந்தக் கொடிகள் 14 அங்குல நீளம் வளர்கின்றனவாம். ஆகையால் நிலத்தைக் கொத்திக் களையெடுக்க வேண்டும். கொடிகள் படர்ந்து இரண்டொரு மாதத்தில் நிலத்தை மூடிக்கொள்ளும். அப்போது அநேகமாய் களைப்புகள் முளைப்பதேயில்லை. மற்றும், விரை முளைத்து இளஞ்செடியாய் இருக்கும்போது இந்தச் செடிகளுக்கு அடிக்கொடியில் பலம் குறைவு. ஆகையால் காற்றால் புரப்பட்டுக் காயம்படும், அல்லது கொடியே முறிந்துபோம். இதைத் தடுப்பதற்காக அடிக்கொடியின் மேல் கொஞ்சம் மண்ணைப்போட்டு மூட வேண்டும். சித்தவட்டம் முதலிய விடங்களில் சிறு மூலாம்பழச் செடிகளுக்கும் இப்படியே செய்கின்றனர். வளரும் கொடிகளை அடிக்கடி மேல் கீழாய்ப் புரட்டக் கூடாது. புரட்டினால் கொடிகள் நசுங்கி முறிந்துபோம். பிஞ்சுகள் அதிக



மாக விடுவதில்லை. மழையில்லாமல் நிலம் அதிகமாய் வறண்டிருக்கும்போது நிலத்தை இரண்டொரு முறை களைவெட்டி லேசாய்க்கிளறிவிட வேண்டும். செடிக்கு நான்கு ஐந்து சிறு காய்களை மட்டும் வளரவிட்டு, மற்றப் பிஞ்சுகளைப் பூவிலேயே அறுத்தெறிய வேண்டும். மற்றும், காய் உள்ளக் கொடிகளைக்கூட காய்க்குமேல் சுமார் ஒரு அடி தூரத்திற்கப்பால் நுனிக் கொடியை அறுத்து செடிகளை அதிகமாய் படர விடாமல் செய்ய வேண்டும்.

### காய்ப்பு.

பூசணிச் செடிகள் சுமார் 40 முதல் 60 நாளைக்குள் பூர்க்க ஆரம்பிக்கும். இந்தச் செடியில் ஆண் பூ வேறு பெண் பூ வேறு. ஆரம்பத்தில் ஆண் பூவே அதிகம். நல்ல பெரிய காய்கள் வேண்டுமானால் செடி ஒன்றுக்கு நான்கு அல்லது ஐந்து காய்களை மட்டுந்தான் நன்றாய் வளரவிட வேண்டும். கரைத்து அழுகிய சாணி எருவை பிஞ்சுகள் வளர்ந்து வரும்போது வாரத்திற்கொருதரம் இரண்டு மூன்று முறை வார்த்தால், காய்கள் வெகு சீக்கிரம் பெரிதாய் வளரும். பூசணிக்காய்களைப் பிஞ்சிலும், அரைக்காய் பதத்திலும் கூட உண்கிறோம். பெண் பூக்கள் சுமார் ஒரு மாதத்திற்குள்ளேயே ஜாதிக்குத் தக்கவாறு பத்து பவுண்டு எடையுள்ள காய்களாகக்கூட வளர்கின்றன. மார்கழி மாதத்தில், தென் இந்தியாவில் எல்லா இடங்களிலும் பூசணி காய்க்க ஆரம்பிக்கிறது. தைமாதம் ஆரம்பத்தில் பெரும் பொங்கலன்று பூசணியைக் கறியும் குழம்பும் செய்து அரிசிப்பொங்கலுடன் சூரிய பகவானுக்கு அர்ப்பணம் செய்து உண்பது இந்துக்களுக்கு வழக்கம். ஆகவே ஏகரா ஒன்றுக்கு 1,000 முதல் 1,200 செடிகளை வளர்க்கிறார்கள். ஐந்நூறு செடிகள் வீதம் வளர்ந்து, செடி ஒன்றுக்கு நான்கு காய்கள் பெரிதானால் 2,000 காய்கள் சுமார் ஆறு மாதத்திற்குள் கிடைக்கும். நன்றாய்ப் பழுத்த பழத்தைச் சுமார் ஆறு மாதம் வரையில் வைத்திருந்தால் கூட அழுகுவதில்லை. ஆகையால் மற்ற காய்கறிகளைப் போலல்லாமல் இதைச் சாவகாசமாய் கிராக்கி மேலிடும்போது விற்கலாம்.

மலச்சிக்கல் நீங்கவும், தேக புஷ்டிக்காகவும், சிலர் பழத்தை நறுக்கி வேகவைத்து, நெய்யும் சர்க்கரையும் கலந்து 'ஹல்வா' செய்து இரண்டொரு மாதம் வைத்து உண்கின்றனர். பூசணி விரையின் பருப்பு முந்திரிப் பருப்பு முதலியவைகளைப்போல் ருசியுள்ளது, தேகத்திற்குப் பலத்தைத் தருவது. மூத்திரக் கட்டையும், வெள்ளரி விரையைப் போலவே இதுவும் நீக்கும். ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் பன்றிக்கறி தின்பவர்களுக்குக் குடலில் 'டேப் ஒர்ம்' என்னும் 'நாடாப் புழு' சேர்ந்து வளரும். அது எவ்வகையான விரோசன (பேதி) மருந்துகளாலும் வெளியே வருவதில்லை. பூசணி விரையைத் தின்றால் இந்தப் புழுக்கள் சாகின்றன:—டேப் 'ஒர்ம்' என்னும் புழுவால் அதிக வயிற்றுவலி உண்டாகும். ஆகையால் அதற்கு முக்கிய மாகக்

தாகிய பூசணி விரைக்கு ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் கிராக்கி அதிகம்.

## மிகவும் பெரிய காய்கள்.

நல்ல செழிப்பான செவ்வல் நிலத்தில் விரைக்க வேண்டும். அதிகமாய் நீர் பாய்ச்ச வேண்டும். பின் வருமாறு நிலத்தைப் பண்படுத்த வேண்டும்:—

சுமார் ஆறு அடி சதுரம் உள்ள நிலத்தின்மேல், ஆறு அங்குல உயரம் நல்ல மக்கிய எருக்களைப்போட்டு மூடவேண்டும். பிறகு நிலத்தில் ஒரு அடி ஆழம்மட்டும் நன்றாய் மண் வெட்டி பிக் ஆக்ஸ்,' கடப்பாறை முதலியவற்றால் வெட்டி மண்ணும் எருவும் நன்றாய்க் கலக்கும்படிச் செய்யவேண்டும். பிறகு வெளிப்பக்கத்தில் இரண்டொரு அடி தூரமட்டும் உள்ள எரு கலந்த மண்ணையெல்லாம் எடுத்து குழியைச் சுற்றிலும் உள்ள வெட்டிய எரு கலந்த மண்ணின்மேல், போட்டு, பாத்தியை உயர்த்த வேண்டும். இதைச் சுற்றிலும் சுமார் ஒரு அடி அகலம் மண் எடுத்த பள்ளத்தில் (காலில்) மழையும் பாய்ச்சும் நீரும் தங்கும்படியான ஓர் வாழைக்கிடங்கு போல் ஆகும். ஆகவே, செடிக்குச் சமீபத்திலும் அதற்கு மேலும் நீர் பாய்ச்சுவதில்லை. இப்படிச் செய்த பாத்திகளில் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் சுமார் பன்னிரண்டு விரைகளை ஒன்றரை அங்குல ஆழத்தில் நட்டு மண்ணை மூடவேண்டும். பிறகு விரை முளைத்த பிறகு நன்றாய் வளரும் இரண்டு செடிகளை மட்டும் விட்டு மற்றவைகளைப் பிடுங்கி எறியவேண்டும். மூன்று நாளைக்கொரு முறை சுற்றிச செய்திருக்கும் பள்ளம் அல்லது கிடங்கில் அதிகமாய் நீர் பாயச்சவேண்டும். பிஞ்சுகள் விட்ட பிறகு அதிக பெரிய காய்கள் வேண்டுமானால் இவற்றுள் மிகவும் பருத்து வளர்ந்திருக்கும் ஒரு பத்து அல்லது பதினைந்து நாள் வளர்ந்த பிஞ்சை மட்டும் வளரவிட வேண்டும். மற்றவைகளை அறுத்தெறிய வெண்டும். வேறு பூப் பிஞ்சுகள் வளருமானால் அவைகளையும், மற்ற காய்க்காத கொடிகளையும் அதிகமாய் நீள வொட்டாமல் நுனிப்பாகத்தை யெல்லாம் அறுத்து எறிய வேண்டும். இப்படி வளரும் செடிகளுக்கு அழுகிய சாணி நீற்றை காய்வளரும் போது, விட்டு விட்டு இரண்டு மூன்று தரம் வார்க்க வேண்டும். காயின் கீழே கொஞ்சம் வைக்கோல், உலர்ந்த புல் முதலியவற்றைப் போட்டால் நில உஷ்ணத்தால் பச்சை உண்டாகாது. காயின் மேலும் வைக்கோல், ஓலை முதலியவற்றைப் போட்டு இலேசாய் மூடி நிழல் படுத்தினால் காய் ஒன்று 100 பவுண்டு எடையுள்ளது கூட, நல்ல பெரிய ஜாதிச் செடிகளில் உண்டாகும்.

தாவர வகைக் காய்க்கனிகளுள் எல்லாம் பூசணிப்பழமும் பலாப்பழமும் மிகவும் பெரியவை. பளுவுள்ளவை. பல்லாரி ஜில்லாவில் சில பூசணிப்பழங்கள் 150 பவுண்டு எடைகூடி இருக்கின்றனவாம். ஆகையால் ஏராளமாய் எளிதில் எல்லா இடங்களிலும் வளரும் உணவுப் பதார்த்தங்களுள் பூசணி ஓர் மிகச் சிறந்த பதார்த்தம் ஆகும்.

(சுதேசமித்திரன்)


# SADHANA AUSADHALAYA

DACCA (Bengal).

—ADHYAKHA—

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும் வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப் படும். வியாதியின் விவரத்தைத் தெரிவித்தால் இனாமாக மருந்து பட்டி அனுப்பப் படும்.

மகரத்வஜம். (சுவர்ணஸிந்தூரம்.)

அசல் தங்கத்துடன் ஒரு சேர் ... ரூ 4 0 0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து: பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்த சுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸரஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி.

இது வீர்யக் குறைவு, அபோகத் தன்மை, சுவப்னஸ்கலிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0.

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் இடுப்பு நோய், முதுகு வலி கர்ப்பப்பை வியாதி, அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ 5.

## ஸூராஜ்மல் கம்பெனியாருடைய
## வெள்ளி சாமான்கள்

## எல்லோருக்கும் திருப்தியை கொடுக்கும்.

நம்முடைய வெள்ளி சாமான்கள் சில பேருக்கு மாத்திரம் திருப்தி அளிப்பவை அல்ல. ஸகலமானவர்களுக்கும் தேவையானவை. மிகவும் அதிகமாகவும், நேர்த்தியாகவும் அவை தயாரிக்கப் படுவதால் வெகு ஸரஸமான விலைக்கு விற்கக் கூடும்.

ஸாமான்கள் வெகுநாளைக்கு உபயோகப்படுவதால் சிக்கனமானவையே. நீங்கள் கஷ்டப்படும்போதும்: ஸுகப் படும்போதும் அவை உங்களுக்குப் பயனளிப்பவை.

### ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கோ,

வைர, ரத்ன வெள்ளி தங்க வியாபாரிகள்.

313, எஸ்பிளனேட் மதராஸ்.

ராக் போர்ட்டு கேட் : திருச்சி.

# முக்கிய அறிவிப்பு.

---

சென்ற ஜனவரிமீ முதல் பஞ்சாயத்துகளுக்கு அனுப்பப்பட்ட ஒவ்வொருமாதத்திய சஞ்சிகையிலும் அந்த அந்த பஞ்சாயத்திலிருந்து 1929ஞு டிசம்பர்மீ முடிய சேரவேண்டிய சந்தாபாக்கியை குறித்து அறிவிப்புகள் அனுப்பியும் அநேகம் பஞ்சாயத்துகள் சந்தாவை அனுப்பாமல் இருப்பதைப்பற்றி ரொம்பவும் விசனிக்கிறோம் "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்ற மூத்தோர் வார்த்தைப்படிக்கு இந்த மாதத்திலும் அறிவிப்புகள் வைத்திருக்கிறோம். ஒவ்வொரு பஞ்சாயத்தும் இது முதலாவது விழித்துக்கொண்டு அவர் அவர்களுடைய சந்தா பாக்கியை அடுத்த சஞ்சிகை வெளிவருவதற்குள் மணியார்டர் மூலமாய் அனுப்பி நமது யூனியன் மேன் மேலும் விருத்தி அடையவேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம்.

அறிவிப்பில் கண்டபடி அனுப்பிய பஞ்சாயத்துகளுக்கு எங்களுடைய மனமார்ந்த வந்தனத்தை இதன் மூலமாய் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

குறிப்பு :—அப்படிக்கு அடுத்த சஞ்சிகை வெளிவருவதற்குள் சந்தாதொகையை செலுத்தாத பஞ்சாயத்துகளுக்கு அடுத்த சஞ்சிகை வீ. பி. மூலியமாய் அனுப்பப்படும். வீ. பியை ஒவ்வொரு பஞ்சாயத்தும் அவசியம் அங்கீகரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுறோம்.

இப்படிக்கு
A. ராஜகோபால ரெட்டி,
பிரஸிடெண்டு.
பாரஸ்ட் பஞ்சாயத்தார்கள் யூனியன் லிமிடெட்.

## “கிராம அபிவிருத்தி” (ரூரல் இர்தியா) பஞ்சாங்கம்.

### சுக்கிலஞூ ஆடிமீ

### இங்கிலீஷ் 1929-ம்ஞூ ஜூலை-ஆகஸ்டுமீ

| ஜூலை | ஆடி | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | செ | தச 17-50 | விசா 40-6 | ம-சி | சூன்யதிதி |
| 17 | 2 | பு | ஏகா23-20 | அநு 38-58 | சி | ஸர்வ ஏகாதசி, சூன்யதிதி, |
| 18 | 3 | வி | துவா 29-30 | கே 46-35 | பி-சி | கோபத்ம விருதாரம்பம் |
| 19 | 4 | வெ | திர 35-40 | மூல 55-8 | அ-பி | பிரதோஷம், பும்ஸவனம் கிருஷியாரப்பட் செய்ய |
| 20 | 5 | ச | சசி 41-55 | மூ 60 | சி | பவித்ர சதுர்தசி |
| 21 | 6 | ஞா | பௌ47-20 | பூரா 1-33 | அ-சி | பௌர்ணமி வியாஸபூஜை |
| 22 | 7 | தி | பிர 52-10 | உத் 8-25 | ம-அ | ஆஷாடபஹுளம் |
| 23 | 8 | செ | துவி 56-28 | திரு 14-40 | சி | சாதுர்மாஸ்ய துவிதியா, |
| 24 | 9 | பு | திரு 59-48 | அவி 20-5 | பி-சி | வியாதியஸ்தர் மருந்துண்ண |
| 25 | 10 | வி | சது 60 | சதை24-45 | ம-சி | கரிநாள், சங்கஷ்ட சதுர்தி |
| 26 | 11 | வெ | சது 2-8 | பூரட்28-25 | சி | ஏற்றம் ஸ்தாபிக்க |
| 27 | 12 | ச | பஞ்ச 3-28 | உத் 30-53 | சி-ம | கிருஷியாரம்பும் செய்ய |
| 28 | 13 | ஞா | ஷஷ் 3-28 | ரே 32-8 | அ-சி | காதுகுத்த, வித்தியாரம்பம் |
| 29 | 14 | தி | சப் 2-10<br>அஷ்59-25 | அசு 31-58 | சி | வியாதியஸ்தர் மருந்துண்ண |
| 30 | 15 | செ | நவ 55-13 | பர 30-18 | சி | வியாதியஸ்தர் குளிக்க |
| 31 | 16 | பு | தச 49-28 | கிரு * 27-10 | அ-சி | கிருத்திகை, மாடுகொள்ள |
| ஆகஸ்டு 1 | 17 | வி | ஏகா42-35 | ரோ 22-40 | ம | ஸர்வ ஏகாதசி |
| 2 | 18 | வெ | துவ 34-40 | மிரு 17-8 | சி | காவேரிபெருக்கு |
| 3 | 19 | ச | திர 25-58 | திரு 10-33 | சி | மகா சிவராத்திரி |
| 4 | 20 | ஞா | சசி16-55 | புந 8-40<br>பூச 56-48 | சி | ஸர்வத்ர அமாவாசை<br>கரிநாள் |
| 5 | 21 | தி | அம 8-0<br>பிர 59-48 | ஆயி 50-18 | சி-ம | சிரவணசுத்தம் மழை |
| 6 | 22 | செ | வி52-25 | மக 44-40 | சி | சந்திரதர்சனம் |
| 7 | 23 | பு | திரு 46-28 | பூர 40-33 | அ | ஆடிப்பூரம் |
| 8 | 24 | வி | சது 42-15 | உத் 28-8 | ம-சி | நாக சதுர்த்தி |
| 9 | 25 | வெ | பஞ் 40-8 | அஸ் 37-43 | அ-சி | வித்தியாரம்பம் செய்ய |
| 10 | 26 | ச | ஷஷ் 40-8 | சித் 39-49 | ம-சி | சஷ்டி சூர்யஷஷ்டி |
| 11 | 27 | ஞா | சப் 42-13 | சுவ 43-13 | சி-ம | வித்தியாரம்பம் |
| 12 | 28 | தி | அஷ் 46-5 | விசா 48-38 | ம-சி | சுபகாரியங்கள் விலக்க. |
| 13 | 29 | செ | நவ 51-15 | அனு 55-13 | சி-ம | வியாதியஸ்தர் குளிக்க |
| 14 | 30 | பு | தச 57-18 | கே 60 | சி | |
| 15 | 31 | வி | ஏகா 60 | கே 2-45 | பி | ஏகாதசி |